IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,
TIRUVANNAMALAI.
IDOP No. 44/2020

31.08.2023 – **ம.சா.1 திரு. சகாயஜெயபிரகாஷ்** சத்திய வாக்குமூலத்தின் பேரில் பேரில் எதிர்மனுதாரரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

நான் என் மனைவிக்கோ என் குழந்தைக்கோ எந்த வித உதவியும் செய்யாமல் இருந்து வந்ததால் தான் ஆர்மி வெல்பர் சென்டர்க்கு என் மனைவி புகார் அனுப்பினார் என்று சொன்னால் சரியல்ல . என் மனைவியை பராமரித்ததற்கோ அல்லது பண உதவி செய்ததையோ காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை , ஆனால் என்னிடம் ஆதாரம் உள்ளது. அத்தகைய ஆதாரம் என்னிடம் இருந்திருக்கும் பட்சத்தில் நான் அதை தாக்கல் செய்திருப்பேன் என்றும் இல்லாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல . நான் கடந்த 2020 செப்டம்பர் மாதம் பணி ஓய்வு பெற்றேன் . இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நான் பணி ஓய்வு பெற்றேன் . நான் ஓய்வு பெற்ற பிறகு எனக்கும் என் மனைவி குழந்தைகளுக்கும் தனித்தனியாக நான் பணிபுரிந்த ராணுவத்துறையில் பண பலன்கள் கொடுத்தார்கள் என்றும் நான் என் மனைவி மற்றும் குழந்தைகள் ஒன்றாக இருக்கிறோம் என என் துறையில் பொய் சொல்லி எல்லா பண பலன்களையும் நான் மட்டுமே பெற்று கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. கடைசியாக நான் என் மனைவி மற்றும் என் குழந்தை வேட்டவலத்தில் ஒன்றாக வசித்தோம் என்றால் சரிதான் . நான் என் மனைவி மற்றும் குழந்தைகளை அடித்து உதைத்து துன்புறுத்தியதால் தான் என்னுடன் என் மனைவி குழந்தைகள் ஒன்றாக வாழ வருவதற்கு பயப்படுகிறார்கள் என்றால் சரியல்ல. நான் காஞ்சனூரில் எதிர்மனுதாரருக்கு எதிராக எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை என்றும் எதிர்மனுதாரரை காஞ்சனூர் போலீஸ் விசாரிக்க ஒரு போது அழைத்தது இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரும் அவரது குழந்தைகளும் இன்றளவும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார்கள் என்றும் நான் தான் அவர்களுடன் வாழ மறுக்கிறேன் என்றால்

சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது அம்மாவுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் சம்மந்தப்பட்ட சொத்தானது எதிர்மனுதாரரின் தாயார் எதிர்மனுதாரருக்கு முன்னமே எழுதி கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. ரூபாய் 70 லட்சம் மதிப்பில் வீடு கட்டி கொடுப்பதற்கு எனக்கு எந்த வித பண வசதியும் இல்லை என்று சொன்னால் சரியல்ல . ரூபாய் 70 லட்சம் செலவானதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . ஆனால் என்னிடம் ஆதாரம் உள்ளது. நான் பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் கேட்ட நிவாரணம் கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/– P. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.